## நியாய கட்டணம் - தரமான கல்வி

# FTMS கல்லூரி வழங்க முன் வருகிறது

செய்தி - படங்கள்:
ப.புவனேஸ்வரன்



சாஜிலால் திவாகரன்

மாணவர்கள் முழுமையான கல்வியைப் பெற நியாயமான கட்டணத்தில் தரமான கல்வியை வழங்க முன்வந்துள்ளது எப்.டி.எம்.எஸ். (FTMS) கல்லூரி.

எஸ்.பி.எம்., எஸ்.டி.பி.எம். முடித்த மாணவர்கள் தடையின்றி தங்களது மேற்கல்வியைத் தொடர எப்.டி.எம்.எஸ். (FTMS) கல்லூரி கணினி நிபுணத்துவ படிப்பு, வர்த்தக நிபுணத்துவ படிப்பு மற்றும் கணக்கியல் நிதித்துறை நிபுணத்துவ படிப்பில் டிப்ளோமா மற்றும் டிகிரி கல்வியை வழங்குகிறது.

### கணினித் துறை

மென்பொருள் பொறியியல், கணினி விளையாட்டுத் தொழில் நுட்பம், கணினி விஞ்ஞானம், வர்த்தக தகவல் விஞ்ஞானம், தகவல் துறை ஆகிய அனைத்து படிப்புகளையும் தலைநகர் ஜாலான் ஹங் கஸ்தூரியில் வீற்றிருக் கும் எப்.டி.எம்.எஸ். (FTMS) கல்லூரி வழங்குகிறது.

மென்பொருள் பொறியியல் மற்றும் கணினி விளையாட்டு தொழில்நுட்ப படிப்புக்கு டிப்ளோமா, டிகிரி ஆகிய படிப்பை மேற்கொள்ள இக்கல்லூரி வாய்ப்பை வழங்குகிறது.

தற்போது கணினி மயமாகிக் கொண்டிருக்கும் நவீன உலகத்தில் கணினி மென்பொருள் பொறியியல் துறை, கணினி விளையாட்டு தொழில் நுட்பம் போன்ற படிப்பை மேற்கொள்பவர்களுக்கு சிறந்த எதிர்காலம் காத்திருக்

தொடர்வதற்காக எப்டி.எம்.எஸ். கல்லூரிக்கு வரும் மாணவர்கள் இங்கே டிப்ளோமா அல்லது இளங்கலை படிப்பை முடித்த பிறகு இக்கல்லூரியின் அங்கீகாரம் பெற்ற அனைத்துலக பல்கலைக்கழகங்களில் தங்களது மேற்படிப்பையும் மேற்கொள்ளலாம். குறிப்பாக கிழக்கு லண்டன் பல்கலைக்கழகம் (UEL), இங்கிலாந்து டி மோன்போர்ட் பல்கலைக் கழகம் (DE MONFORT), போர்ட்ஸ்மவுத் (PORTSMOUTH) போன்ற தரம் வாய்ந்த கல்லூரிகளில் தங்களது படிப்பை மேற்கொள்ளலாம். அதற்கு



கணினி துறை மாணவர்கள் தயாரித்த கிரா:பிக் அனிமேஷன் (கோப்புப் படம்).

கிறது. அனைத்துலக கணினி யுகச் சந்தையில் கணினி விளையாட்டுக்கு பொது மக்களிடமிருந்து குறிப்பாக இளைஞர்களிடமிருந்து தீராத வரவேற்பு இருப்பது இத்துறைகளில் படிப்பவர்களுக்கு சிறந்த எதிர் காலத்தை உருவாக்கிக் கொடுக்கும் என்று எப்.டி.எம். எஸ். கல்லூரியின் தலைமை நிர்வாகி சஜிலால் தெரிவித்தார்.

### வர்த்தகத் துறை

கணக்கியல் நிதித்துறை, வர்த்தகத் துறை, விற்பனை நிர்வாகத் துறை, ஹோட்டல் நிர்வாகத்துறை, வர்த்தக தகவல் தொழில்நுட்பத் துறை, ஆங்கிலப் பயிற்சி ஆகிய அனைத்து படிப்புகளும் வர்த்தகத் துறையின் கீழ் இருக்கிறது. இத்துறையில் அனைத்து படிப்புகளும் டிப்ளோமா படிப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தகத் துறையில் ஆர்வம் உள்ள மாணவர்கள் தங்களது விருப்பத்திற்கேற்றபடி சிறந்த வர்த்தகப் படிப்பை எப்.டி.எம்.எஸ். கல்லூரியில் மேற்கொள்ளலாம். நாட்டில் அதிகமாகப் பேசப்படும் படிப்புகளில் வர்த்தகத் துறையைச் சார்ந்த படிப்புகள் முதல் வரிசையில் இருக்கின்றன. இப்படிப்புக்கு அனைத்துலக ரீதியில் அதிக வரவேற்பு இருக்கிறது. அதைத் தவிர்த்து சொந்தமாக வர்த்தகர்களாக

எப்.டி.எம்.எஸ். கல்லூரி உத்தரவாதம் வழங்கும் என்றும் சஜிலால் தெரிவித்தார்.

எப்.டி.எம்.எஸ். கல்லூரியில் படிக்க ஆர்வம் உடைய மாணவர்களுக்கு முழு கல்விக் கடன் வசதி ஏற்பாடு செய்து தரப்படும். இங்கே படிக்க விரும்பும் மாணவர்கள் முதல் பதிவுக் கட்டணத்தை மட்டும் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து கொடுத்தால் போதும். மேற்கொண்டு படிப்புக்கான அனைத்து செலவுகளும் கடனுதவியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். தற்போது கல்லூரியில் பதியவரும் மாணவர்களுக்கு சிறப்புக் கழிவும் உண்டு என்கிறார் சஜிலால்.

3 மாடிக் கட்டடத்தைக் கொண்டிருக்கும் இக்கல்லூரியில் இப்போது 21 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது மேற்கல்வியை மேற் கொண்டு வருகின்றனர். இக்கட்டடத்தில் ஒரே நேரத்தில் 2,000 மாணவர்கள் படிக்கக்கூடிய வசதிகள் உண்டு. 15 வகுப்பறை, 6 கணினிக் கூடங்கள், நூல்நிலையம் படிக்கும் அறை என்று தனித்தனி அறைகள் மாணவர்களின் வசதிக்கேற்ப பிரித்து வழங்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்குப் போதிக்கும் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அந்தந்தக் கல்வித் தரத்துக்கு ஏற்றவாறு நிபுணத்துவம் பெற்ற அனைத்துலக பல்கலைக்கழகங்களிலிருந்து



கல்லூரியில் பயிலும் மாணவர்கள்

விரும்புபவர்களும் அந்தப் படிப்பை எப்.டி.எம்.எஸ். கல்லூரியில் மேற்கொள்ளலாம் என்று அதன் நிர்வாகி மேலும் தெரிவித்தார்.

### கணக்கியல் நிதித்துறை நிபுணத்துவ படிப்பு

கணக்கியல் பொறுப்பாளர் ஏசிசிஏ (ACCA) கணக்கியல் நிர்வாகம் (CIMA), நிதி தகுதி பெற்ற நிதி மதிப்பீடு அதிகாரி, கணக்கியல் துறையில் இளங்க லைப் பட்டப் படிப்பு ஆகிய சிறந்த தரமான படிப்புகளை இக்கல்லூரி வழங்குகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கல்லூரியில் வழங்கப்படும் அனைத்து படிப்புகளும் மலேசிய கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற படிப்புகள். எஸ்.பி.எம். அல்லது எஸ்.டி.பி.எம். படிப்பை முடித்து விட்டு தங்களது மேற்கல்வியைத்

வரவழைக்கப் பட்டிருக்கின்றனர்.

இங்கே முழு நேரக் கல்வியைத் தவிர்த்து பகுதி நேர கல்வியும் வழங்கப்படுகிறது. குறிப்பாக வேலை செய்து கொண்டு மேற்கல்வி படிக்க விரும்புபவர்களுக்கும் இங்கே பகுதி நேர படிப்பு இருக்கிறது என்று அவர் விவரித்தார்.

இப்போது எஸ்.பி.எம்., எஸ்.டி.பி.எம். முடித்த மாணவர்கள் தலைநகர் ஜாலான் ஹங் கஸ்தூரியில் இருக்கும் எப்.டி.எம்.எஸ். கல்லூரியில் மார்ச் 19 மற்றும் 30ஆம் தேதி நடைபெறவிருக்கும் உபகாரச் சம்பள நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டு தங்களது மேற்கல்வியைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**தொடர்புக்கு: 03-20509595**
**iquiries@ftms.edu.my**
**www.ftmsglobal.com**